**ஹோமகம பிரதேச சபை**
**கொழும்பு மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 15 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஹோமகம பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆம் ஆண்டு முதல் இதுவரை நிர்மாணிக்கப்பட்ட கூட்டுப்பெறுமதி ரூபா 53,879,529 ஆன சனசமூக மண்டபம், சுடலைக்கூடம், தாய் சேய் சிகிச்சை நிலையம் மற்றும் அலுவலகக் கட்டிடம் என்பவற்றின் நிர்மாணக் கிரயம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 20 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட ரூபா 7,539,576 பெறுமதியான இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்கள், மோட்டார் வாகனமும் வண்டியும் மற்றும் தளபாடங்களும் பொருத்திகளும் என்பவற்றின் பௌதீக இருப்பை உறுதிப்படுத்தாமல் நிலையான சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது விற்றுத் தீர்க்கப்பட்ட விற்பனைப் பெறுமதி ரூபா 227,750 தொகையான பொருட்களின் கிரயத்தை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட உடற்பயிற்சி உபகரணங்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 9,706,300 தொகைக்காக கடன்கொடுத்தோர் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பௌதீக ரீதியில் காணப்படாத ரூபா 5,502,619 பெறுமதியான களஞ்சியப் பொருட்கள், களஞ்சிய இருப்பாக இருப்புக் கணக்கில் பதியப்பட்டிருந்தது.

(ஊ) சபை வளவில் அமைந்துள்ள ஆவணக் காப்பகக் கட்டிடத்திற்கு 2015 மார்ச் 25 ஆந் திகதி தீயினால் ஏற்பட்ட நட்டம் ரூபா 1,202,867 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 நிகழத்தக்க பொறுப்புக்கள்**

வெளித்தரப்பினரால் சபைக்கு எதிராக பெறுமதி ரூபா 32,500 தொகையான 05 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் கீழ் குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற 08 கணக்கு விடயங்களின் மீதிகளுக்கும் உபயோகப் புத்தகங்கள் / பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 16,553,734 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

**1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**பெறவேண்டிய கணக்குகள்**

(அ) 2017 ஆம் ஆண்டிற்குக் கிடைக்க வேண்டிய ரூபா 209,142 தொகையான நிலுவைச் சம்பளம் 2018 செப்தெம்பர் வரையிலும் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீகொட பொருளாதார நிலையத்தின் நம்பிக்கைப் பொறுப்புச் சபைக்கு ரூபா 300,000 தொகையான வருடாந்த வாடகைக்கு கையளிக்கப்பட்டிருந்த 01 ஏக்கர் 02 றூட் 10 பேர்ச் அளவான காணிக்காக 2013 ஆம் ஆண்டின் போது செய்யப்பட்டிருந்த ரூபா 900,000 தொகையான புதிய மதிப்பீட்டுத் தொகை கிடைக்காமையின் காரணமாக 2014, 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்காக கிடைக்க வேண்டிய நிலுவை வாடகைப் பணம் ரூபா 2,700,000 ஆகும்.

**1.3.5 இனங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1971 இன் 48 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனம் தொடர்பான விசேட ஏற்பாடுகள் அதிகாரச்சட்டம் | - | ஆதனவரி அறவிடுவதற்காக சபை அதிகாரப் பிரதேசத்தில் சகல அசையாத ஆதனங்களும் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், சபையினால் 07 வருடங்களுக்கு முன் பெறப்பட்ட மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது. |

(ஆ) சுற்றறிக்கை மற்றும் கடிதங்கள்

| | | | |
|---|---|---|---|
| (i) | 1985 மார்ச் 20 ஆந் திகதிய திசெ/01 ஆம் இலக்க கடிதம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சுற்றறிக்கை | 4,838,218 | நிலத்தின் அளவின் விகிதத்தை விஞ்சி அனுமதியற்ற நிர்மாணங்கள் மற்றும் மோட்டார் வாகனங்களை நிறுத்துவதற்காக அறவிடப்படுகின்ற சேவைக் கட்டணங்களில் 25 சதவீதம் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 1993 நவம்பர் 18 ஆந் திகதிய நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் சுற்றறிக்கை இலக்கம் 15 | 19,352,872 | நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கணக்கில் காணப்படுகின்ற பணத்தை இனங்கண்டு செயல்திட்டத்திற்காக ஈடுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 122,213,348 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 124,665,116 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 53,926,700 | 71,670,580 | 76,151,369 | 29,688,575 | 5,326,700 | 52,746,452 | 65,708,626 | 33,717,640 |
| வாடகை | 12,618,791 | 11,502,847 | 11,861,422 | 393,302 | 12,618,791 | 13,368,675 | 13,996,329 | 739,620 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 6,000,900 | 4,906,274 | 5,000,928 | - | 2,500,000 | 5,291,041 | 5,291,041 | - |
| ஏனைய வருமானம் | 381,735,026 | 244,922,680 | 376,228,139 | 162,665,062 | 2,936,947,108 | 249,250,437 | 300,518,503 | 247,496,949 |

**2.2.2 வீதவரியும் வரியும்**

**ஆதன வரி**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு அறவிட வேண்டிய ஆதனவரி ரூபா 29,610,616 ஆக இருந்ததுடன் அது தொடர்பான காலப்பகுப்பாய்வு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| நிலுவைக்குரிய காலஎல்லை | ஹோமாகம உப அலுவலகம் | வேதர உப அலுவலகம் | மொத்தம் |
|---|---|---|---|
| 01 வருடத்திற்கு குறைவு | 4,051,839 | 2,186,541 | 6,238,380 |
| 1 -3 வருடங்களுக்கிடையில் | 5,452,004 | 9,117,713 | 14,569,717 |
| 3 - 5 வருடங்களுக்கிடையில் | 1,190,338 | 3,376,810 | 4,567,148 |
| 5 வருடங்களுக்கு மேல் | 2,476,274 | 1,759,097 | 4,235,371 |
| | 13,170,455 | 16,440,161 | 29,610,616 |

**2.2.3 வாடகை**

**கடை வாடகை**

(அ) 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக காணப்படுகின்ற ரூபா 45,419 தொகையான நிலுவை இறைச்சிக் கடை வாடகை வருமானம் வைப்புப் பணத்திலிருந்து அறவிடப்பட்ட போதும் அது இதுவரையும் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நலன்புரிச் சங்கம், சனசமூக மண்டபம், வங்கி மற்றும் உப தபால் அலுவலகங்கள் போன்றவற்றுக்கு சேவை வழங்குகின்ற நிறுவனங்களுக்காக வழங்கப்பட்டுள்ள சபைக்குச் சொந்தமான கட்டிடங்களுக்கும் கடை வாடகை பதிவேடு பேணப்பட்டிருந்தது.

**2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 87,388,797 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 75,011,833 ஆகக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) கைவிடப்பட்ட இலக்குகள்**

மீளாய்வாண்டின் போது அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 1,155,000 பெறுமதியான 03 வேலைகள் அமுல்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருந்தன.

**(ஆ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

சபையினால் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள், கறதியான கழிவுப் பொருள் தளத்திற்கு போக்குவரத்து செய்வதற்காக 2016 ஆம் ஆண்டின் கூறு விலைகளின் பிரகாரம் ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனத்திற்கு அந்த ஒப்பந்தத்தை கையிளப்பதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபார்சின் பிரகாரம் கட்டுப்பாட்டுக் குழு தீர்மானித்திருந்ததுடன் இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இந்த நிறுவனம் 2016 ஆம் ஆண்டில் கழிவுகளை போக்குவரத்து செய்திருந்ததுடன் கழிவுப்பொருள் போக்குவரத்தின் போது இடம்பெற்ற மோசடியின் காரணமாக ரூபா 2,491,031 தொகையான நட்டமொன்று சபைக்கு ஏற்பட்டிருந்தமை புலனாய்வு அறிக்கையின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டது.

(ii) 2017 ஆம் ஆண்டு கழிவுப்பொருள் போக்குவரத்திற்காகவும் இந்த நிறுவனத்திற்கே ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் இந்த ஆண்டின் போதும் பல்வேறு மோசடிகள் இடம்பெற்றதாக மேற்பார்வையாளரினால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

(iii) இரு தரப்பினருக்கிடையே 2017 மார்ச் 01 ஆந் திகதி முதல் 2018 மார்ச் 01 ஆந் திகதி வரை கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை 2018 சனவரி முதல் இரத்துச் செய்யப்பட்டு ஒப்பந்தகாரர் கறுப்புப் பட்டியலில் இடப்பட்டமையினால் ஒப்பந்தகாரரால் சபைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்ததுடன் இதுவரையும் அந்த வழக்கு முடிவடைந்திருக்கவில்லை.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்திராதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

**(அ) ஊழியர் வெற்றிடமும் மிகையும்**

இரண்டாம் மட்டத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர், நூலகர், வருமானப் பரிசோதகர், முன்பள்ளி ஆசிரியர் பதவிகள் 01 வீதம் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் ஆரம்ப மட்டத்தின் பதவிகளில் 17 வெற்றிடங்களும் 01 மிகையும் காணப்பட்டன.

**(ஆ) ஊழியர் கடன்**

2017 திசெம்பர் 31 இல் அறவிட வேண்டிய ஊழியர் கடன் மீதி ரூபா 23,038,556 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் தகவல்களைக் கண்டறிய முடியாத 12 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 53,981 தொகை மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற, சேவையை விட்டுச் சென்ற மற்றும் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட 06 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய தொகை ரூபா 369,727 ஆகும்.

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

உடற்பயிற்சி நிலையத்தை தாபிப்பதற்காக உடற்பயிற்சி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு கூறுவிலை கோரப்பட்டிருந்ததுடன் 03 நிறுவனங்களிலிருந்து கூறுவிலைகள் பெறப்பட்டிருந்தன. ஐரோப்பாவில் உற்பத்தி செய்யப்பட்ட உபகரணங்களைக் காண்பித்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் ரூபா 9,706,300 தொகையான அதிகரித்த விலைக்கேள்வி ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 3,703,260 தொகையான குறைந்த கேள்விக்கும் உயர்ந்த கேள்விக்கும் இடையே வேறுபாடு ரூபா 6,003,040 ஆகும். எனினும், இந்த உபகரணங்கள் ஐரோப்பாவில் (ஸ்பெயினில்) உற்பத்தி செய்யப்பட்டதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக சான்றிதழொன்று சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் இதில் எந்த உபகரணமும் உற்பத்தி செய்யப்பட்ட நாடு அல்லது தொடரிலக்கம் என்பன குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த பொருட்கள் சீனாவிலிருந்தும் தாய்லாந்திலிருந்தும் இறக்குமதி செய்யப்படுகின்றமை சுங்கத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 சொத்துக்கள் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்படாமை

(அ) சபைக்குரிய 18 காணிக் கூறுகளுக்கான உரித்துறுதி தொலைந்து போயிருந்தது.

(ஆ) வேதற உப அலுவலகத்தில் பொருட் பதிவேட்டு புத்தகங்கள் நாளதுவரையாகப் பேணப்படாதிருந்ததுடன் 46 சாதாரண கதிரைகளும், 17 இருப்பு அலுமாரிகள், 03 கணனிகள் மற்றும் 12 கணிப்பாண்கள் என்பன பொருட் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

#### 3.4.2 விளைவற்ற / குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பெறுமதி இனங்காணப்பட முடியாத மின் பிறப்பாக்கி இயந்திரமொன்று துருப்பிடிக்கும் நிலையில் காணப்பட்டது.

### 3.5 இனங்காணப்பட்ட நட்டம்

பிரதான அலுவலகத்தின் களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 111,985 பெறுமதியான 113 கொடிக் கம்பங்கள் பற்றாக்குறையாகக் காணப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) 95 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 10,422,200 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 39 செலவின விடயங்களுக்காக ரூபா 3,864,500 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதில் 50 சதவீதத்தை விட கூடுதலான அளவு செலவிடப்படாதிருந்ததுடன் அத்தொகை ரூபா 3,475,039 ஆகக் காணப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கண்ககாய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) கணக்கீடு | | கணக்கு புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் நாளதுவரையாகப் பேணப்படாமை. |
| (ஆ) சொத்துக்கள் / ஆதனங்கள் | (i) | பதிவேடுகளுக்கு கொண்டுவரப்படாமை |
| | (ii) | பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை |
| (இ) இருப்புக் கட்டுப்பாடு | | இருப்புக்கள் பதிவேடுகளுக்கு கொண்டு வரப்படாமை |